CS (Main) Exam,2021

HXS-B-TML

தமிழ் / TAMIL

தாள் II / Paper II

(இலக்கியம்) / (LITERATURE)

கால அளவு : **மூன்று** மணி நேரம் *Time Allowed : **Three** Hours*	மொத்த மதிப்பெண்கள் : **250** *Maximum Marks : **250***

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions :

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

The number of marks carried by a question / part is indicated against it.

*Answers must be written in **TAMIL**.*

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION A

Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) தலைவியின் பிரிவுத்துயர் குறுந்தொகையில் உவமை நயத்தோடு எவ்விதம் கூறப்படுகிறது ? *10*

(b) நல்லாற்றுப்படூஉம் நெறியாக நரிவெரூஉத்தலையார் கூறுவன யாவை ? *10*

(c) மாணிக்கவாசகர் தன் அவல நிலையை இறைவன் முன் முறையிடும் பாங்கினை எழுதுக ? *10*

(d) சிலப்பதிகாரத்தில் ஆயர் வாழ்வு எவ்வாறு வருணிக்கப்படுகிறது ? *10*

(e) வினைசெயல் வகை அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து வரைக. *10*

Q2. (a) வேந்தனின் கடமைகளை மோசிகீரனாரும் அரசாளும் முறையை இளந்திரையனாரும் எவ்வாறு கூறியுள்ளனர் ? *20*

(b) வையை நதி மற்றும் மதுரைக் கோட்டை வாயில் வருணனையில் காணும் உள்ளுறைச் செய்திகளை எழுதுக. *15*

(c) கும்பகருணனுக்கும் சுக்கிரிவனுக்கும் நிகழும் போரினை விவரி ? *15*

Optional Province · optionalprovince.com

Q3. (a) செஞ்சோற்றுக் கடன் கழித்த செம்மலாக கும்பகருணனின் பாத்திரப்படைப்பு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ? *20*

(b) பாவை நோன்பின் பயன்கள் யாவை ? விளக்கு. *15*

(c) அமைச்சரின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவன யாவை ? *15*

Q4. (a) "உகிர் நுதி புரட்டும் ஓசை போலச்
செங்கால் பல்லி தன் துணை பயிறும் . . . "
– கூற்றுச் சூழலை அடிக் கருத்துடன் விவரி. *20*

(b) "தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவா என்று ஆராய்ந்து அருள் . . ."
– கூற்றுச் சூழலை அடிக் கருத்துடன் விவரி. *15*

(c) "அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கஞ்சி அழிந்தஎன்னை;
விடற்கரியாய் விட்டிடுதி கண்டாய்"
– கூற்றுச் சூழலை அடிக் கருத்துடன் விவரி. *15*

Optional Province · optionalprovince.com

SECTION B

Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) பாவேந்தர் தான் விரும்பும் பெண்ணிய மாற்றங்களைக் குடும்ப விளக்கில் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *10*

(b) கறுப்பு மலர்கள் எனும் நூல் கைம்பெண்கள், ஏழைகள் போன்ற விளிம்புநிலை மக்களை எவ்வாறு சித்தரிக்கிறது ? *10*

(c) 'சித்திரப்பாவை' நாவல் ஒவியக்கலை அழிந்து வருவதை எப்படிச் சித்தரிக்கிறது ? *10*

(d) முத்துப்பட்டனின் திருமணம் சமூகத் தடைகளை மீறி எவ்வாறு நிகந்தேறியது ? *10*

(e) ஜெயகாந்தன் சிறுகதைகளின் மொழி நடையினை ஆராய்க ? *10*

Q6. (a) கண்ணனைத் தாயாகவும் தந்தையாகவும் பாரதி எவ்வாறு காண்கிறார் ? *20*

(b) தமிழகத்தின் தாழ்ந்த நிலையை அண்ணா எவ்வாறு சாடுகிறார் ? *15*

(c) 'சுண்டெலிப் பெண்ணே' என விளித்து 'மலையருவி' யில் பெண்ணுக்குக் கூறும் அறிவுரைகள் யாவை ? *15*

Optional Province · optionalprovince.com

Q7. (a) முத்துப்பட்டன் கதையில் காணும் நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்க. *20*

(b) விளையாட்டுப் பிள்ளையாகக் கண்ணனை பாரதி எவ்வாறு போற்றுகிறார் ? *15*

(c) ஜெயகாந்தன் சிறுகதைகளில் மையக் கருத்துகளாக இருப்பவை எவை ? விளக்கு. *15*

Q8. (a) குடும்ப விளக்கில் தமிழ் உணர்வு குறித்த தம் கருத்துகளைப் பாவேந்தர் எவ்விதம் நிலைநாட்டுகிறார் ? *20*

(b) தேர்தல் முறை பற்றிய மு.வ.வின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக ? *15*

(c) 'யாருக்கும் வெட்கமில்லை' எனும் நாடகத்தில் சோ யாரைச் சாடுகிறார் ? ஏன் ? *15*

Optional Province · optionalprovince.com